6. $\alpha, \beta, \gamma \in \mathbb{R} - \{0\}$ எனக் கொள்வோம். வழக்கமான குறிப்பீட்டில், $\mathbf{a} = \alpha\mathbf{i} + \beta\mathbf{j}$, $\mathbf{b} = \gamma\mathbf{i} - \beta\mathbf{j}$ ஆகியன $|\mathbf{a}|^2 + |\mathbf{b}|^2 = 1$ ஐத் திருப்தியாக்கும் இரு காவிகள் எனக் கொள்வோம். $\alpha^2 + 2\beta^2 + \gamma^2 = 1$ எனக் காட்டுக. $\mathbf{a}, \mathbf{b}$ ஆகிய காவிகள் ஒன்றுக்கொன்று செங்குத்தானவை எனத் தரப்பட்டுள்ளது. $\beta^2 = \alpha\gamma$ எனக் காட்டுக. $\alpha = \frac{1}{3}$ எனின், γ இன் பெறுமானத்தைக் காண்க.

$$|\underline{a}|^2 = \alpha^2 + \beta^2$$
$$|\underline{b}|^2 = \gamma^2 + (-\beta^2) = \gamma^2 + \beta^2$$ } (5)

$$|\underline{a}|^2 + |\underline{b}|^2 = 1$$

$$\Rightarrow \alpha^2 + \beta^2 + \gamma^2 + \beta^2 = 1$$

$$\therefore \alpha^2 + 2\beta^2 + \gamma^2 = 1. \text{ ---------(1)} \quad (5)$$

$$\underline{a} \perp \underline{b} \Rightarrow \underline{a} \,.\, \underline{b} = 0$$

$$\Rightarrow \alpha\gamma - \beta^2 = 0 \quad (5)$$

$$\therefore \beta^2 = \alpha\gamma$$

$\alpha = \frac{1}{3}$ எனின் $\beta^2 = \frac{\gamma}{3}. \Rightarrow \gamma > 0$

$$(1) \Rightarrow \frac{1}{9} + 2.\frac{\gamma}{3} + \gamma^2 = 1 \quad (5)$$


$$9\gamma^2 + 6\gamma - 8 = 0$$


$$(3\gamma - 2)(3\gamma + 4) = 0$$

$\gamma = \frac{2}{3}$ அல்லது ~~$\gamma = -\frac{4}{3}$.~~

$$\therefore \gamma = \frac{2}{3}. \quad (5)$$

7. நிறை W ஐ உடைய ஒரு சீரான கோல் AB கீழ்முக நிலைக்குத்துடன் கோணம் $\alpha \left(0 < \alpha < \frac{\pi}{2}\right)$ ஐ ஆக்கிக் கொண்டு நாப்பத்தில், முனை B ஒர் ஒப்பமான நிலைக்குத்துச் சுவரைத் தொட்டுக் கொண்டிருக்கும் அதே வேளை B இற்கு நிலைக்குத்தாக மேலே இருக்கும் ஒரு புள்ளி C இல் சுவருடன் இணைந்த ஓர் இலேசான நீட்டமுடியாத இழையினால் மற்றைய முனை A இல் உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு தொங்கவிடப்பட்டிருக்கின்றது. இழை இறுக்கமாக இருக்கும் அதே வேளை அது கீழ்முக நிலைக்குத்துடன் கோணம் θ ஐ ஆக்குகின்றது. கோலும் இழையும் சுவருக்குச் செங்குத்தான ஒரு நிலைக்குத்துத் தளத்தில் இருக்கின்றன. $\tan\alpha = 2\tan\theta$ எனக் காட்டுக.





விசைகள் E இல் சந்திக்கின்றன. (5)

B என்பது DC இன் நடுப்புள்ளி. (5)

$EB = l\sin\theta = a\sin\alpha$ ------- (1) (5)

$BC = l\cos\theta$

$BD = 2a\cos\alpha$

$BC = BD$

$\therefore l\cos\theta = 2a\cos\alpha$ ------- (2) (5)

$\frac{(1)}{(2)} \Rightarrow \tan\theta = \frac{1}{2}\tan\alpha$

$\therefore \tan\alpha = 2\tan\theta.$ (5)

<u>வேறுமுறை</u>

$\rightarrow R = T\sin\theta$ (5)

$\uparrow \quad T\cos\theta = w$ (5)


$\therefore R = w\tan\theta$ (5)

$\circlearrowleft_{A}) \quad R\cdot 2a\cos\alpha = w.a\sin\alpha$ (5)

$\Rightarrow w\tan\theta \times 2 = w\tan\alpha$

$\therefore \tan\alpha = 2\tan\theta.$ (5)

8. நிறை W ஐ உடைய ஒரு துணிக்கை P ஆனது மையம் O, ஆரை a, நிறை W ஆகியவற்றை உடைய ஒரு சீரான, மெல்லிய, வட்டத் தட்டின் விளிம்புடன் இணைக்கப்பட்டுள்ளது. தட்டு ஒரு கரடான நிலைக்குத்துச் சுவருக்கு எதிரே ஒரு கரடான கிடை நிலத்தின் மீது ஒய்வில் உள்ளது. தட்டுக்கும் நிலத்திற்குமிடையே உள்ள உராய்வுக் குணகம் μ ஆவதோடு தட்டுக்கும் சுவருக்குமிடையே உள்ள உராய்வுக் குணகமும் μ ஆகும். OP ஆனது கிடையுடன் கோணம் $\theta\left(0<\theta<\frac{\pi}{2}\right)$ ஐ ஆக்கும்போது தட்டு எல்லை நாப்பத்தில் இருக்கின்றதெனத் தரப்பட்டுள்ளது. தட்டு மீது தாக்கும் விசைகள் உருவிற் குறிக்கப்பட்டுள்ளன. $\cos\theta=\frac{2\mu(\mu+1)}{\mu^2+1}$ எனக் காட்டுக.



$\rightarrow R_2=\mu R_1$ ---------(1) (5)

$\uparrow R_1+\mu R_2=2W$ (5)

$\therefore R_1+\mu\cdot\mu R_1=2W$

$\therefore R_1=\frac{2W}{(1+\mu^2)}$ ---------(2) (5)

$\circlearrowleft O)\ \mu R_1\cdot a+\mu R_2\cdot a-W\cdot a\cos\theta=0$ (5)

$\cos\theta=\frac{\mu(R_1+R_2)}{W}$

$=\frac{\mu(1+\mu)R_1}{W}$ ((1)இலிருந்து)

$=\frac{2\mu(1+\mu)}{(1+\mu^2)}$. ((2) இலிருந்து) (5)

9. A, B, C ஆகியன, A உம் B உம் சாராதனவாகவும் B உம் C உம் தம்முட் புறநீக்குவனவாகவும் $P(B) = \frac{1}{5}$ ஆகவும் $P(A \cup B) = P(B \cup C)$ ஆகவும் இருக்கத்தக்கதாக, ஒரு மாதிரி வெளி Ω இல் உள்ள மூன்று நிகழ்வுகள் எனக் கொள்வோம். $P(C) = \frac{4}{5}P(A)$ எனக் காட்டுக.
$P(C|A) = 2P(A \cap C) \neq 0$ எனின், $P(C)$ ஐக் காண்க.

$P(A \cup B) = P(B \cup C)$

$\Rightarrow P(A) + P(B) - P(A \cap B) = P(B) + P(C)$ (5)

$\Rightarrow P(A) - P(A) \cdot P(B) = P(C)$

(5)

$\Rightarrow P(C) = \frac{4}{5}P(A)$ (5) $\left(\because P(B) = \frac{1}{5}\right)$

$P(C|A) = \frac{P(A \cap C)}{P(A)} = 2P(A \cap C)$

(5)

$\Rightarrow P(A) = \frac{1}{2}$ $(\because P(A \cap C) \neq 0)$

$\therefore P(C) = \frac{4}{5} \cdot \frac{1}{2} = \frac{2}{5}$ $\left(\because P(C) = \frac{4}{5}P(A)\right)$

(5)

10. ஏறுவரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்ட 1, p, 4, 10, q என்னும் ஐந்து நோக்கல்களின் இடை 6 ஆகும்; இங்கு p, q ஆகியன மெய்யெண்கள். இந்நோக்கல்கள் உருமாற்றம் $y = 3x + c$ இனால் உருமாற்றப்படுகின்றன; இங்கு x ஆனது தொடக்க நோக்கல்களையும் c ஆனது ஒரு மெய்ப்பெண்ணையும் குறிப்பிடுகின்றன. உருமாற்றப்பட்ட நோக்கல்களின் இடையும் வீச்சும் முறையே 20, 33 ஆகும். p, q, c ஆகியவற்றின் பெறுமானங்களைக் காண்க.

$$\frac{1+4+p+10+q}{5}=6 \quad (5)$$

$$\Rightarrow p+q=15$$

$$3\times 6+c=20 \quad (5)$$

$$\therefore c=2.$$

உருமாற்றப்பட்ட நோக்கல்களின் வீச்சு $=(3q+c)-(3+c)$

$$\therefore 3q-3=33 \quad (5)$$

$$\therefore q=12$$

$$\therefore p=3.$$


p, q மற்றும் c ஆகியவற்றின் பெறுமானங்களுக்கு (10)

ஏதாவது இரண்டிற்கு (5)

பகுதி B

11. (*a*) ஒரு நேர்கோடு வழியே மாறா அமர்முடுகல் $f\ \text{m s}^{-2}$ உடன் இயங்கும் ஒரு துணிக்கை P ஆனது நேரம் $t = 0\ \text{s}$ இல் வேகம் $60\ \text{m s}^{-1}$ உடன் ஒரு புள்ளி O ஐக் கடந்து செல்கின்றது; இங்கு $f > 0$ ஆகும். துணிக்கை P ஓய்வுக்கு வந்தவுடன் அது O ஐ நோக்கி ஒரு மாறா ஆர்முடுகல் $f\ \text{m s}^{-2}$ உடன் இயங்குகின்றது. O இல் ஓய்வில் இருக்கும் வேறொரு துணிக்கை Q ஆனது நேரம் $t = \frac{30}{f}\ \text{s}$ இல் மாறா ஆர்முடுகல் $f\ \text{m s}^{-2}$ உடன் அதே நேர்கோட்டின் வழியே P ஐ நோக்கி இயங்கத் தொடங்கி, ஒரு வேகம் $30\ \text{m s}^{-1}$ ஐப் பெற்ற பின்னர் அதே மாறா வேகத்தில் தொடர்ந்து இயங்குகின்றது. துணிக்கை Q மாறா வேகத்தை அடைந்து 10 செக்கனுக்குப் பின்னர் துணிக்கை Q துணிக்கை P ஐச் சந்திக்கின்றது. $t = 0\ \text{s}$ இலிருந்து P, Q ஆகியன சந்திக்கும் வரைக்கும் அவற்றின் இயக்கங்களுக்குரிய வேக - நேர வரைபுகளை ஒரே வரிப்படத்தில் பரும்படியாக வரைக. $f = 3$ எனவும் O இலிருந்து துணிக்கைகள் சந்திக்கும் புள்ளியின் தூரம் 450 m எனவும் காட்டுக.

(*b*) சமாந்தர நேர்க் கரைகளும் அகலம் a உம் உள்ள ஓர் ஆறு ஒரு சீரான வேகம் u உடன் பாய்கிறது. உருவில் காட்டியுள்ளவாறு கரைகளின் மீது A, B, C ஆகிய புள்ளிகள், AB ஆனது கரைகளுக்குச் செங்குத்தாகவும் $BC = 2a$ ஆகவும் இருக்கத்தக்கதாக, உள்ளன. P, Q ஆகிய இரு படகுகள் முறையே A, B ஆகியவற்றில் அவற்றின் பயணங்களை ஒரே கணத்தில் ஆரம்பிக்கின்றன.




படகு P ஆனது நீர் தொடர்பாக ஒரு வேகம் $2\sqrt{5}\,u$ உடன் திசை $\overrightarrow{AC}$ இற் செல்கிறது. படகு Q ஆனது நீர் தொடர்பாகக் கதி $\sqrt{2}\,u$ உடன் புவி தொடர்பாகத் திசை $\overrightarrow{BA}$ இற் செல்கின்றது. P, Q ஆகியவற்றின் இயக்கங்களுக்கான வேக முக்கோணிகளை ஒரே வரிப்படத்தில் பரும்படியாக வரைக.


புவி தொடர்பாக P இன் வேகத்தையும் புவி தொடர்பாக Q இன் கதியையும் காண்க.

அத்துடன், Q தொடர்பாக P இன் வேகத்தின் திசையையும், இதிலிருந்து, P இற்கும் Q இற்குமிடையே உள்ள மிகக் குறுகிய தூரத்தையும் காண்க.

(*a*)



P மற்றும் Q சந்திக்கும் புள்ளி B என்க.



20

P இன் இயக்கத்தை கருதுகையில்,

$OB =$ பரப்பு $\triangle OCD -$ பரப்பு $\triangle DIE$

$$= \frac{1}{2} \times \frac{60}{f} \times 60 - \frac{1}{2} 10 \times 10 f \quad (5)$$

(5)

$$= \frac{1800}{f} - 50f \text{ ---------(1)}$$

Q இன் இயக்கத்தை கருதுகையில்,

$OB =$ பரப்பு $\triangle DFG +$ பரப்பு $DGHI$

$$= \frac{1}{2} \times \frac{30}{f} \times 30 + 30 \times 10 \quad (5)$$

(5)

$$= \frac{450}{f} + 300 \text{ ---------(2)}$$

$$(1) \& (2) \Rightarrow \frac{1800}{f} - 50f = \frac{450}{f} + 300 \quad (10)$$

$$\frac{1350}{f} = 50f + 300$$

$$50f^2 + 300f - 1350 = 0 \quad (5)$$

$$f^2 + 6f - 27 = 0$$

$$(f-3)(f+9) = 0 \quad (5)$$

$$f = 3. \quad (5) \quad (\because f > 0)$$


45

$$\therefore OB = \frac{450}{3} + 300$$

$$= 450m \quad (10)$$

10

(b)



$\cos\theta = \frac{1}{\sqrt{5}}$

$\sin\theta = \frac{2}{\sqrt{5}}$

$\tan\theta = 2$

ஏதாவது ஒன்றுக்கு (5)

$\underline{V}(P,W) =$  (5)

$2\sqrt{5}u$

$\underline{V}(W,E) = u \rightarrow$ (5)

$\underline{V}(Q,W) = \sqrt{2}u$ (5)

$\underline{V}(Q,E) = \uparrow$ (5)

$$\underline{V}(P,E) = \underline{V}(P,W) + \underline{V}(W,E)$$


$$= \vec{XY} + \vec{YZ}$$

$$= \vec{XZ}$$

$$\underline{V}(Q,E) = \underline{V}(Q,W) + \underline{V}(W,E)$$

$$= \vec{UY} + \vec{YZ}$$

$$= \vec{UZ}$$





45

$XV = 2\sqrt{5}u\cos\theta = 2u$

$YV = 2\sqrt{5}u\sin\theta = 4u$

$\underline{V}(P,E) = \vec{XZ}$

$= \sqrt{2^2+3^2}u$  (10)


$= \sqrt{13}u$ 

$\tan\beta = \frac{3}{2}$ (5)

பூமி சார்பாக Q இன் வேகம் $= UZ = u$ (5)

20

$\underline{V}(P,G) = \underline{V}(P,E) + \underline{V}(E,Q)$


$=$ 

$\therefore$ P மற்றும் Q க்கிடையிலான மிகக்குறைந்த தூரம் $= a\sin\frac{\pi}{4} = \frac{a}{\sqrt{2}}$. (10)

10

---


12. (*a*) திணிவு $10m$ ஐ உடைய ஓர் ஒப்பமான சீரான குற்றியின் புவியீர்ப்பு மையத்தினூடாக உள்ள நிலைக்குத்துக் குறுக்கு வெட்டு $ABCDE$ உருவிற் காட்டப்பட்டுள்ளது. AE ஐக் கொண்ட முகம் ஓர் ஒப்பமான கிடை நிலத்தின் மீது வைக்கப்பட்டுள்ளது. மேலும் AB, BC, DE ஆகியன அவற்றைக் கொண்ட முகங்களின் அதியுயர் சரிவுக் கோடுகளாக இருக்கும் அதே வேளை CD ஆனது AE இற்குச் சமாந்தரமும் $E\hat{A}B = A\hat{B}C = D\hat{E}A = \frac{\pi}{3}$ உம் ஆகும்.



முறையே $5m$, m, m திணிவுகளை உடைய P, Q, R என்னும் மூன்று துணிக்கைகள் முறையே AB, BC, DE ஆகியவற்றின் மீது பிடித்துவைக்கப்பட்டுள்ளன. B இல் உள்ள குற்றியில் நிலைப்படுத்தப்பட்ட ஓர் ஒப்பமான இலேசான சிறிய கப்பிக்கு மேலாகச் செல்லும் ஓர் இலேசான நீட்டமுடியா இழையின் நுனிகளுடன் P, Q ஆகிய துணிக்கைகள் இணைக்கப்பட்டுள்ளன. உருவில் காட்டப்பட்டுள்ள அமைவிலிருந்து இழை இறுக்கமாக இருக்கத் தொகுதி ஓய்விலிருந்து விடுவிக்கப்படுகின்றது.


குற்றியின் ஆர்முடுகலையும் P மீது குற்றியினால் பிரயோகிக்கப்படும் மறுதாக்கத்தின் பருமனையும் துணிவதற்குப் போதுமானளவு சமன்பாடுகளைப் பெறுக.

(*b*) உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு ஆரை a ஐயும் மையம் O ஐயும் உடைய $A\hat{O}B = \frac{2\pi}{3}$ ஆகவுள்ள ஒரு வட்ட வில் வடிவத்தில் இருக்கும் ஓர் ஒப்பமான மெல்லிய விறைத்த கம்பி AB ஆனது OA நிலைக்குத்தாக இருக்குமாறு நிலைக்குத்துத் தளத்தில் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. திணிவு m ஐ உடைய ஓர் ஒப்பமான சிறிய பவளம் A இல் நிலைப்படுத்தப்பட்டு, கம்பி வழியே கதி $\sqrt{\frac{7ga}{2}}$ உடன் எறியப்படுகின்றது. பவளம் O பற்றிக் கோணம் $\theta\left(0<\theta\leq\frac{2\pi}{3}\right)$ இனூடாகத் திரும்பியிருக்கும்போது அதன் கதி v ஆனது $v^2 = \frac{ga}{2}(3+4\cos\theta)$ இனால் தரப்படுகின்றதெனக் காட்டுக.



மேலும், கம்பியிலிருந்து விலகிச் சென்ற பின்னர் பவளம் மறுபடியும் A இற்கு வருகின்றதெனக் காட்டி, பவளம் A ஐ அடையும்போது அதன் கதியைக் காண்க.

(*a*)



விசைகளுக்கு :

$\underline{a}(\text{Block}, E) = \rightarrow F$ $\quad$ $\underline{a}(R, Block) = \searrow f_2$

$\underline{a}(P, Block) = \swarrow f_1$

$\underline{a}(Q, Block) = \nwarrow f_1$ $\quad$ (5)

P மீதான (5)

Q மீதான (5)

R மீதான (5)

குற்றி மீதான (5)

$F = ma$ இனை பிரயோகிக்க

(5) (5) (5) (5)

தொகுதிக்கு $\rightarrow$ $0 = 10mF + 5m\left(F - \frac{f_1}{2}\right) + m\left(F - \frac{f_1}{2}\right) + m\left(F + \frac{f_2}{2}\right)$ (5)

P இற்கு ↙ $5mg \times \frac{\sqrt{3}}{2} - T = 5m\left(f_1 - \frac{F}{2}\right)$ (10)

Q இற்கு ↖ $T - mg \times \frac{\sqrt{3}}{2} = m\left(f_1 - \frac{F}{2}\right)$ (10)


R இற்கு ↘ $mg\frac{\sqrt{3}}{2} = m\left(f_2 + \frac{F}{2}\right)$ (5)

P இற்கு $S - 5mg \times \frac{1}{2} = 5m\left(-F \times \frac{\sqrt{3}}{2}\right)$ (10)

↖ ↘

85

(b)



சக்திக் காப்பு :

$\frac{1}{2}mV^2 + mg(a - a\cos\theta) = \frac{1}{2}m \times \frac{7ga}{2}$ (15)

$V^2 = -2ga(1 - \cos\theta) + \frac{7ga}{2}$

$= \frac{ga}{2}(3 + 4\cos\theta)$. (5)

அ.சக்தி (5)

இ.சக்தி. (5)

சமன்பாடு (5)

20

$\theta = \frac{2\pi}{3}$ ஆகும்போது, $V^2 = \frac{ga}{2}\left(3 + 4\left(-\frac{1}{2}\right)\right)$

$= \frac{ga}{2}$. (5)

புவியீர்ப்பின் கீழ் B இலிருந்து நேர்கோடு OA இனை கடக்கும் புள்ளிவரை, $s = ut + \frac{1}{2}at^2$ ஐ பிரயோகிக்க :

$$\leftarrow \frac{a\sqrt{3}}{2} = \sqrt{\frac{ga}{2}} \times \frac{1}{2}T. \quad (5)$$

$$\therefore T = \sqrt{\frac{6a}{g}} \quad (5)$$

$$\downarrow \quad h = -\sqrt{\frac{ga}{2}} \times \frac{\sqrt{3}}{2}T + \frac{1}{2}gT^2 \quad (10)$$

$$= -\sqrt{\frac{ga}{2}} \times \frac{\sqrt{3}}{2} \times \sqrt{\frac{6a}{g}} + \frac{1}{2}g \times \frac{6a}{g} \quad (5)$$

$$= -\frac{3a}{2} + 3a = \frac{3a}{2}. \quad (5)$$

$\therefore$ பவளம் மறுபடியும் A இற்கு வருகின்றது.

35


சக்திக்காப்பு தத்துவத்திலிருந்து, பவளம் மறுபடியும் A இற்கு வரும்போது அதன் கதி

$$= \sqrt{\frac{7ga}{2}}. \quad (10)$$

10

---

13. ஓர் ஒப்பமான கிடை மேசை மீது A, B என்னும் இரு நிலைத்த புள்ளிகள், $AB = 16a$ ஆக இருக்கத்தக்கதாக, உள்ளன. இயற்கை நீளம் $2a$ ஐயும் மீள்தன்மை மட்டு $3mg$ ஐயும் உடைய ஓர் இலேசான மீள்தன்மை இழை S_1 இன் ஒரு நுனி திணிவு m ஐ உடைய ஒரு துணிக்கை P உடனும் S_1 இன் மற்றைய நுனி A உடனும் இணைக்கப்பட்டுள்ளன. மேலும், இயற்கை நீளம் $4a$ ஐயும் மீள்தன்மை மட்டு $4mg$ ஐயும் உடைய இரண்டாம் இலேசான மீள்தன்மை இழை S_2 இன் ஒரு நுனி P உடனும் S_2 இன் மற்றைய நுனி B உடனும் இணைக்கப்பட்டுள்ளன. உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு ஒரு புள்ளி C இல் துணிக்கை P நாப்பத்தில் இருக்கின்றது.




AC இன் நீளத்தையும் BC இன் நீளத்தையும் காண்க.

இப்போது துணிக்கை P ஆனது B ஐ நோக்கித் தூரம் $2a$ இற்கு இழுக்கப்பட்டு, ஓய்விலிருந்து விடுவிக்கப்படுகின்றது. P இன் இயக்கத்தின் சமன்பாடு $\ddot{x} + \omega^2(x - 6a) = 0$ இனால் தரப்படுகின்றதெனக் காட்டுக; இங்கு $AP = x$ உம் $\omega\ (> 0)$ ஆனது துணியப்பட வேண்டிய ஒரு மாறிலியும் ஆகும்.

$X = x - 6a$ என எடுத்து, $\ddot{X} + \omega^2 X = 0$ எனக் காட்டி, இந்த எளிய இசை இயக்கத்தின் ஆவர்த்தன காலத்தைக் குறிப்பிடுக.

சூத்திரம் $\dot{X}^2 = \omega^2(c^2 - X^2)$ ஐப் பயன்படுத்தி, இவ்வியக்கத்தின்போது வீச்சம் c ஐயும் P இன் உயர்ந்தபட்சக் கதியையும் காண்க.


இவ்வியக்கத்தின்போது P ஆனது C ஐ அடையும் முதற் கணத்தில் இழை S_2 வெட்டப்படுகின்றது.



உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு AC மீது D ஆனது, $AD = 2a$ ஆக இருக்கத்தக்கதாக, உள்ள புள்ளி எனக் கொள்வோம். C இலிருந்து D இற்கு Pஇன் இயக்கத்திற்கான சமன்பாடு $\ddot{y} + \omega_1^2 y = 0$ இனால் தரப்படுகின்றதெனக் காட்டுக; இங்கு $DP = y$ உம் $\omega_1\ (> 0)$ ஆனது துணியப்படவேண்டிய ஒரு மாறிலியும் ஆகும்.

இந்த எளிய இசை இயக்கத்தின் வீச்சம் $\sqrt{\frac{68}{3}}\,a$ எனக் காட்டுக.

P இயக்கத்தில் ஈடுபடும் கணத்திலிருந்து அது புள்ளி A ஐ அடையும் வரைக்கும் எடுத்த மொத்த நேரத்தைக் காண்க.



$$T_1 = T_2$$

$$\frac{z}{2a} \times 3mg = \frac{(10a - z)}{4a} \times 4mg \quad \textbf{(10)}$$


$$3z = 20a - 2z$$

$$\therefore z = 4a \quad \textbf{(5)}$$

எனவே, $AC = 6a$ மற்றும் $BC = 10a$.

(5) **(5)**

25



$\underline{F} = m\underline{a}$ இனை P இற்கு பிரயோகிக்க

$$\rightarrow \quad m\ddot{x} = \frac{(16a-x-4a)}{4a} \times 4mg - \frac{(x-2a)}{2a} \times 3mg \qquad (5)$$

(5) (5)

$$\ddot{x} = (12a-x)\frac{g}{a} - (x-2a)\frac{3g}{2a}$$

$$= \frac{g}{2a}\{24a-2x-3x+6a\}$$

$$= \frac{g}{2a}\{30a-5x\}$$

$$= -\frac{5g}{2a}(x-6a) \qquad (10)$$

$\therefore \ddot{x} + \omega^2(x-6a) = 0$, இங்கு $\omega = \sqrt{\frac{5g}{2a}}$. (5)

30

$X = x - 6a \Rightarrow \dot{X} = \dot{x}$ மற்றும் $\ddot{X} = \ddot{x}$ (5)

$\therefore \ddot{X} + \omega^2 X = 0.$ (5)

ஆவர்த்தன காலம் $= \frac{2\pi}{\omega}$. (5)

15

$$\dot{X}^2 = \omega^2\left(c^2 - X^2\right) \text{ --------- (1)}$$

$x = 8a$ ஆகும்போது $\dot{x} = 0.$

i.e. $X = 2a$ ஆகும்போது $\dot{X} = 0$ (5)


எனவே (1) $\Rightarrow c = 2a.$ (5)

$\dot{X}^2$ உயர்வு $= \omega^2 c^2$

$\therefore \dot{X}$ உயர்வு $= \omega c = \sqrt{\frac{5g}{2a}} \times 2a = \sqrt{10ga}.$

(10)

20



$\underline{F} = m\underline{a} \rightarrow : m\ddot{y} = -\frac{y}{2a} \cdot 3mg$ (5)

$\therefore \ddot{y} = -\frac{3g}{2a} y .$

$\therefore \ddot{y} + \omega_1^2 y = 0,$ இங்கு $\omega_1 = \sqrt{\frac{3g}{2a}}.$ (5)

10

$y^2 = \omega_1^2 \left(c_1^2 - y^2\right)$

$y = 4a$ ஆகும்போது $\dot{y} = \sqrt{10ag}$ (5)

$\therefore 10ag = \frac{3g}{2a}\left(c_1^2 - 16a^2\right)$ (5)

$20a^2 = 3c_1^2 - 48a^2$

$\therefore c_1^2 = \frac{68}{3}a^2$

$\therefore c_1 = \sqrt{\frac{68}{3}}a.$ (5)


$\therefore$ எளிய இசை இயக்கத்தின் வீச்சம் $= \sqrt{\frac{68}{3}}a.$

15

C ஐ அடைவதற்கு எடுத்த நேரம் $= t_1 = \frac{1}{4} \cdot \frac{2\pi}{\omega} = \frac{\pi}{2} \cdot \sqrt{\frac{2a}{5g}}$.

(5)

C இலிருந்து D ஐ அடைவதற்கு எடுத்த நேரம் $= t_2$



(5)

$\omega_1 t_2 = \theta = sin^{-1}\left(\frac{4\sqrt{3}}{\sqrt{68}}\right)$.

(5)

$\therefore t_2 = \sqrt{\frac{2a}{3g}} \sin^{-1}\left(\sqrt{\frac{12}{17}}\right)$ (5)

D இல் கதி $= \omega_1 c_1$ (5)

D இலிருந்து A வரை செல்வதற்கு எடுத்த நேரம் $= t_3 = \frac{2a}{\omega_1 c_1} = 2\alpha \sqrt{\frac{2a}{3g}} \cdot \sqrt{\frac{3}{68}} \cdot \frac{1}{\alpha}$

(5)


$\therefore$ தேவையான நேரம் $= \frac{\pi}{2} \cdot \sqrt{\frac{2a}{5g}} + \sqrt{\frac{2a}{3g}} \sin^{-1}\left(\sqrt{\frac{12}{17}}\right) + \sqrt{\frac{2a}{17g}}$. (5)

35

14.(*a*) உற்பத்தி *O* பற்றி *A*, *B* என்னும் புள்ளிகளின் தானக் காவிகள் வழக்கமான குறிப்பீட்டில் முறையே $\mathbf{a} = -\mathbf{i} + \mathbf{j}$, $\mathbf{b} = \mathbf{i} + 2\mathbf{j}$ எனக் கொள்வோம். *C* ஆனது $\overrightarrow{OC} = 2\overrightarrow{OB}$ ஆக இருக்கத்தக்கதாக உள்ள புள்ளி எனக் கொள்வோம். மேலும் *D* ஆனது, *AB* இற்கு *DC* சமாந்தரமாகவும் *AB* இற்கு *AD* செங்குத்தாகவும் இருக்கத்தக்கதாக உள்ள, புள்ளி எனவும் கொள்வோம். $\overrightarrow{OD} = -\frac{8}{5}\mathbf{i} + \frac{11}{5}\mathbf{j}$ எனக் காட்டுக. *E* ஆனது *AB* இனதும் *OD* இனதும் வெட்டுப் புள்ளி எனக் கொள்வோம்.


$\overrightarrow{AE} = \frac{1}{10}\overrightarrow{AB}$ எனக் காட்டுக.

(*b*) உருவில் $B\hat{A}D = B\hat{D}C = \frac{\pi}{2}$, $AB = AD = 2\sqrt{2}a$, $CD = 3a$ ஆகவுள்ள ஒரு தள நாற்பக்கல் *ABCD* காட்டப்பட்டுள்ளது. 3*P*, 3*P*, $2\sqrt{2}P$, $5\sqrt{2}$ *P*, $3\sqrt{2}P$ பருமனுள்ள விசைகள் முறையே *AB*, *AD*, *BD*, *BC*, *DC* ஆகியவற்றின் வழியே எழுத்துகளின் ஒழுங்குமுறையினாற் காட்டப்படும் திசைகளில் தாக்குகின்றன. இவ்விசைத் தொகுதி முறையே *AB*, *AD* ஆகியவற்றின் வழியே எழுத்து ஒழுங்குமுறையினாற் காட்டப்படும் திசைகளில் தாக்கும் αP, βP பருமன் உள்ள இரு விசைகளுக்கும் இடஞ்சுழிப் போக்கில் தாக்கும் திருப்பம் *M* ஐ உடைய ஓர் இணைக்கும் சமவலுவுள்ளது. α, β, *M* ஆகியவற்றின் பெறுமானங்களைக் காண்க.



இப்போது மேற்குறித்த விசைத் தொகுதிக்கு நாற்பக்கலின் தளத்தில் தாக்கும் ஓர் இணை, புதிய விசைத் தொகுதியின் விளையுள் *D* இனூடாகச் செல்லத்தக்கதாக, சேர்க்கப்படுகின்றது. சேர்க்கப்பட்ட இணையின் திருப்பத்தைக் காண்க.

(*a*)



$\underline{c} = \vec{OC}$ மற்றும் $\underline{d} = \vec{OD}$ என்க.

DC ஆனது *AB* க்கு சமாந்தரம் ஆகையால்

$\vec{DC} = \lambda \vec{AB}$, இங்கு λ ஒரு எண்ணியாகும். (5)

$\underline{c} - \underline{d} = \lambda(\underline{b} - \underline{a})$ (5)

$\therefore \underline{d} = 2\underline{b} - \lambda(\underline{i} + 2\underline{j} + \underline{i} - \underline{j})$

$= 2\underline{i} + 4\underline{j} - \lambda(2\underline{i} + \underline{j})$ ----------(1) (5)

$AD \perp AB$, ஆதலால்

$\vec{AD}.\vec{AB}=0.$ (5)

$\left[2\underline{i}+4\underline{j}-\lambda\left(2\underline{i}+\underline{j}\right)+\underline{i}-\underline{j}\right].\left(2\underline{i}+\underline{j}\right)=0$ (5)

$\left[\left(3-2\lambda\right)\underline{i}+\left(3-\lambda\right)\underline{j}\right].\left(2\underline{i}+\underline{j}\right)=0$

$6-4\lambda+3-\lambda=0$

$\therefore \lambda=\frac{9}{5}.$ (5)

எனவே, (1) $\Rightarrow \vec{OD}=2\underline{i}+4\underline{j}-\frac{9}{5}\left(2\underline{i}+\underline{j}\right)$ (5)

$=\left(2-\frac{18}{5}\right)\underline{i}+\left(4-\frac{9}{5}\right)\underline{j}$

$=-\frac{8}{5}\underline{i}+\frac{11}{5}\underline{j}.$ (5)

40

$\vec{AE}=\mu\left(\vec{AB}\right)$, இங்கு μ ஒரு எண்ணியாகும். (5)

$\vec{OE}-\vec{OA}=\mu\left(2\underline{i}+\underline{j}\right)$

$\frac{1}{2}\vec{OD}-\vec{OA}=\mu\left(2\underline{i}+\underline{j}\right)$

(5)

$\frac{1}{2}\left(-\frac{8}{5}\underline{i}+\frac{11}{5}\underline{j}\right)-\left(-\underline{i}+\underline{j}\right)=\mu\left(2\underline{i}+\underline{j}\right)$

$-\frac{8}{10}\underline{i}+\frac{11}{10}\underline{j}+\underline{i}-\underline{j}=\mu\left(2\underline{i}+\underline{j}\right)$


$\frac{2}{10}\underline{i}+\frac{1}{10}\underline{j}=\mu\left(2\underline{i}+\underline{j}\right)$ (5)

$\therefore \mu=\frac{1}{10}$ (5)

$\therefore \vec{AE}=\frac{1}{10}\vec{AB}.$

20

(b)



$BD = \sqrt{8a^2 + 8a^2} = 4a$

$BC = 5a$

$\cos\alpha = \frac{4}{5}$

$\sin\alpha = \frac{3}{5}$. (5)

$\uparrow \beta P = 3P + 2\sqrt{2}P\sin\frac{\pi}{4} + 3\sqrt{2}P\cos\frac{\pi}{4} + 5\sqrt{2}P\sin\left(\frac{\pi}{4}+\alpha\right)$ (10)

$= 3P + 2P + 3P + 5\sqrt{2}P\left\{\sin\frac{\pi}{4}\cos\alpha + \cos\frac{\pi}{4}\sin\alpha\right\}$ (5)

$= 8P + 5\sqrt{2}P\left\{\frac{1}{\sqrt{2}}\times\frac{4}{5} + \frac{1}{\sqrt{2}}\times\frac{3}{5}\right\}$ (5)

$= 15P$.

$\therefore \beta = 15$. (5)

$\rightarrow \alpha P = 3P - 2\sqrt{2}P\cos\frac{\pi}{4} + 3\sqrt{2}P\cos\frac{\pi}{4} - 5\sqrt{2}P\cos\left(\frac{\pi}{4}+\alpha\right)$ (10)

$= 3P - 2P + 3P - 5\sqrt{2}P\left\{\cos\frac{\pi}{4}\cos\alpha - \sin\frac{\pi}{4}\sin\alpha\right\}$ (5)

$= 4P - 5\sqrt{2}P\left\{\frac{1}{\sqrt{2}}\times\frac{4}{5} - \frac{1}{\sqrt{2}}\times\frac{3}{5}\right\}$ (5)

$= 3P$.

$\therefore \alpha = 3$. (5)

$A\uparrow$


$M = -3\sqrt{2}P\cos\frac{\pi}{4}\times 2\sqrt{2}a + 2\sqrt{2}P\sin\frac{\pi}{4}\times 2\sqrt{2}a + 5\sqrt{2}P\sin\left(\frac{\pi}{4}+\alpha\right)\times 2\sqrt{2}a$ (15)

$= 2\sqrt{2}a\{-3P + 2P + 7P\}$

$= 12\sqrt{2}Pa.$ (5)

75

சேர்க்கப்பட்ட இணையின் திருப்பம் M_1 ↻ என்க.




A ↻ $3P \times 2\sqrt{2}a + 12\sqrt{2}Pa - M_1 = 0$ (10)

$\therefore M_1 = 18\sqrt{2}Pa.$ (5)

15

15. (*a*) சம நீளம் $4a$ ஐயும் முறையே நிறைகள் W, $2W$, W ஐயும் உடைய AB, BC, CD என்னும் மூன்று சீரான கோல்கள் B, C ஆகிய முனைப் புள்ளிகளில் ஒப்பமாக மூட்டப்பட்டுள்ளன. முனை A ஒரு நிலைத்த புள்ளியில் ஒப்பமாகப் பிணைக்கப்பட்டுள்ளது. ஓர் இலேசான நீட்டமுடியா இழையின் ஒரு நுனி மூட்டு B உடனும் இழையின் மற்றைய நுனி B இற்கு நிலைக்குத்தாக மேலே ஒரு கிடைச் சீலிங்கின் மீது உள்ள ஒரு புள்ளியுடனும் இணைக்கப்பட்டுள்ளன. உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு AB, CD ஆகிய கோல்கள் ஒவ்வொன்றும் நிலைக்குத்துடன் $60°$ கோணத்தையும் கோல் BC நிலைக்குத்துடன் $30°$ கோணத்தையும் ஆக்கிக்கொண்டும் இழை இறுக்கமாகவும் இருக்கத்தக்கதாக மூன்று கோல்களும் ஒரு நிலைக்குத்துத் தளத்தில், $BE = 3a$ ஆக இருக்குமாறு E இல் ஒரு நிலைத்த ஒப்பமான முளையின் மீது கோல் BC ஐ வைப்பதன் மூலமும் D இல் பருமன் P ஐ உடைய ஒரு கிடை விசையைப் பிரயோகிப்பதன் மூலமும், நாப்பத்தில் வைக்கப்பட்டுள்ளன.




(i) P இன் பெறுமானத்தைக் காண்க.

(ii) முளையிலிருந்து கோல் BC மீது உள்ள மறுதாக்கத்தின் பருமன் $\frac{W}{3}$ எனக் காட்டுக.

(iii) இழையில் உள்ள இழுவையைக் காண்க.


(*b*) உருவிற் காட்டப்பட்டுள்ள சட்டப்படல் முனைகளில் ஒப்பமாக மூட்டப்பட்ட AB, BC, CD, DA, DB என்னும் ஐந்து இலேசான கோல்களைக் கொண்டுள்ளது. $AB = AD = 2a$, $BC = BD = 2\sqrt{3}a$, $C\hat{B}D = \frac{\pi}{2}$ எனத் தரப்பட்டுள்ளது.



மூட்டு C இல் ஒரு சுமை W தொங்கவிடப்பட்டு சட்டப்படல் A இல் ஒரு நிலைத்த புள்ளியில் ஒப்பமாகப் பிணைக்கப்பட்டு, BC கிடையாக இருக்க ஒரு நிலைக்குத்துத் தளத்தில் நாப்பத்தில், மூட்டு D இல் அதற்கு நிலைக்குத்தாக மேல்நோக்கிப் பிரயோகிக்கப்பட்ட பருமன் P ஐ உடைய ஒரு விசையினால், வைக்கப்பட்டுள்ளது. போவின் குறிப்பீட்டைப் பயன்படுத்தி C, B, D ஆகிய மூட்டுகளுக்கு ஒரு தகைப்பு வரிப்படத்தை வரைக.

இதிலிருந்து, கோல்களில் உள்ள தகைப்புகளைக் கண்டு, அவை இழுவைகளா, உதைப்புகளா எனக் குறிப்பிடுக.

(*a*)



(i) C ஐ CD க்கு : $W \times 2a\sin 60^0 - P \times 4a\cos 60^0 = 0.$ (10)

$$\sqrt{3}W - 2P = 0$$

$$\therefore P = \frac{\sqrt{3}}{2}W.$$ (5)

15

(ii) B ↘ BC மற்றும் CD க்கு :

$$2W\times 2a\sin 30^0+W\left(4a\sin 30^0+2a\sin 60^0\right)-R\times 3a-P\times\left(4a\cos 30^0+4a\cos 60^0\right)=0.$$

(15)

$$2W+W\left(2+\sqrt{3}\right)-3R-\frac{\sqrt{3}}{2}W\left(2\sqrt{3}+2\right)=0. \quad (5)$$

$$\therefore 3R=2W+2W+\sqrt{3}W-3W-\sqrt{3}W$$

$$\therefore R=\frac{W}{3}. \quad (5)$$

25

(iii) A ↘ தொகுதிக்கு :

$$W\times 2a\sin 60^0+2W\left(4a\sin 60^0+2a\sin 30^0\right)+$$

$$W\left(4a\sin 60^0+4a\sin 30^0+2a\sin 60^0\right)-P\left(4a\cos 30^0+4a\cos 60^0-4a\cos 60^0\right)-$$

$$R\times 3a-T\times 4a\sin 60^0=0. \quad (20)$$


$$\therefore T\times 2\sqrt{3}=W\times\sqrt{3}+2W\left(2\sqrt{3}+1\right)+W\left(3\sqrt{3}+2\right)-\frac{\sqrt{3}W}{2}\left(2\sqrt{3}\right)-\frac{W}{3}\times 3 \quad (5)$$

$$=8\sqrt{3}W$$

$$\therefore T=4W. \quad (5)$$

30

(b)




கோல்	பருமன்	இழுவை/உதைப்பு
BC	W	உதைப்பு
CD	$\sqrt{2}W$	இழுவை
BD	$\sqrt{3}W$	இழுவை
AB	$2W$	உதைப்பு
AD	$2W$	இழுவை

50


80

16. ஆரை a ஐ உடைய ஒரு சீரான அரைக்கோள ஓட்டின் திணிவு மையம் அதன் மையத்திலிருந்து தூரம் $\frac{a}{2}$ இலும் உயரம் h ஐ உடைய ஒரு சீரான செவ்வட்டத் திண்மக் கூம்பின் திணிவு மையம் அதன் அடியின் மையத்திலிருந்து தூரம் $\frac{h}{4}$ இலும் இருக்கின்றன எனக் காட்டுக.


உயரம் $2a$ ஐ உடைய ஓர் அடித்துண்டு, அடியின் ஆரை $3a$ ஆகவும் உயரம் $3a$ ஆகவும் உள்ள ஒரு திண்மச் சீரான செவ்வட்டக் கூம்பிலிருந்து, அதன் அடிக்குச் சமாந்தரமான ஒரு தளத்தினூடாக வெட்டிச் சிறிய செவ்வட்டக் கூம்பை அகற்றுவதன் மூலம், செய்யப்படுகின்றது. (அடுத்துள்ள உருவைப் பார்க்க.) அடித்துண்டை உருவாக்குவதற்கு அகற்றப்படும் செவ்வட்டக் கூம்பின் திணிவு m ஆகும். அடித்துண்டின் திணிவு $26m$ எனக் காட்டுக.




ஆரை a ஐயும் திணிவு m ஐயும் உடைய ஒரு சீரான அரைக்கோள ஓடும் மேற்சுற்றித்த அடித்துண்டும் நீளம் λa ஐயும் திணிவு m ஐயும் உடைய ஒரு சீரான கோலின் முனைகளுடன் விறைப்பாக நிலைப்படுத்தப்பட்டு, அடுத்துள்ள உருவத்திற் காட்டப்பட்டுள்ளவாறு, ஒரு சேர்த்திப் பொருளானது கோல், அரைக்கோள ஓட்டின் மையம், அடித்துண்டின் அச்சு ஆகிய எல்லாம் ஒரே நேர்கோட்டில் இருக்குமாறு, உருவாக்கப்பட்டுள்ளது. சேர்த்திப் பொருளின் திணிவு மையம் அடித்துண்டின் பெரிய வட்ட அடியின் மையத்திலிருந்து தூரம் $\frac{3}{56}(15+\lambda)a$ இல் உள்ளதெனக் காட்டுக.



சேர்த்திப் பொருள் ஒரு கிடை மேசை மீது, அடித்துண்டின் வளைபரப்பு மேசையைத் தொடுமாறு, வைக்கப்பட்டுள்ளது. சேர்த்திப் பொருளின் சமச்சீரச்சினூடாக உள்ள நிலைக்குத்துக் குறுக்குவெட்டு அடுத்துள்ள உருவிற் காட்டப்பட்டுள்ளது. சேர்த்திப் பொருள் நாப்பத்தில் இருப்பின், $\lambda \leq \frac{11}{3}$ எனக் காட்டுக.





சமச்சீரின்படி திணிவுமையம் G ஆனது x-அச்சில் கிடக்கின்றது.

$OG = \bar{x}$ எனின் (5)


$$\bar{x} = \frac{\int_0^{\frac{\pi}{2}} 2\pi a\sin\theta . a\cos\theta . \sigma d\theta}{\int_0^{\frac{\pi}{2}} 2\pi a\sin\theta \sigma d\theta} \quad (5) \quad (5)$$

$$= \frac{a\int_0^{\frac{\pi}{2}} \sin\theta\cos\theta d\theta}{\int_0^{\frac{\pi}{2}} \sin\theta d\theta}$$

$$(5)\ a\frac{\sin^2\theta}{2}\Big|_0^{\frac{\pi}{2}} = \frac{a}{2}. \quad (5)$$

$$(5)\ -\cos\theta\Big|_0^{\frac{\pi}{2}}$$

30



சமச்சீரின்படி திணிவுமையம் G ஆனது x -அச்சில் கிடக்கின்றது. (5)

$OG = \bar{x}$ என்க

$$\frac{r}{a} = \frac{x}{h}.$$

$$\bar{x} = \frac{\int_0^h \pi\left(\frac{ax}{h}\right)^2 x\rho dx}{\int_0^h \pi\left(\frac{ax}{h}\right)^2 \rho dx} \quad (5) \quad (5)$$

$$= \frac{\int_0^h x^3 dx}{\int_0^h x^2 dx}$$

$$= \frac{\left.\frac{x^4}{4}\right|_0^h}{\left.\frac{x^3}{3}\right|_0^h} \quad = \frac{3h}{4}. \quad (5)$$


(5)

$\therefore$ அடியின் மையத்திலிருந்து G இற்கான தூரம் $= h - \frac{3h}{4} \quad = \frac{h}{4}.$ (5)

30

---

(5) $m = \frac{1}{3}\pi a^2 . a\rho$, இங்கு ρ என்பது அடர்த்தியாகும்.



அடித்துண்டின் திணிவு $= \frac{1}{3}\pi(3a)^2 . 3a\rho - m$ (5)


$$= 27m - m$$


$$= 26m. \quad (5)$$

15

சமச்சீரின்படி சேர்த்திப்பொருள் S இன் திணிவுமையமானது சமச்சீர் அச்சின்மேல் கிடக்கும்.

$OG = \bar{x}$ என்க. (5)



பொருள்	திணிவு	O இலிருந்து திணிவுமையத்திற்கான தூரம்
	$27m$ (5)	$\frac{3a}{4}$ (5)
	m	$2a+\frac{a}{4}$ (5)
	m	$2a+\frac{\lambda a}{2}$ (5)
	m	$2a+\lambda a+\frac{a}{2}$ (10)
S	$28m$ (5)	$\bar{x}$

$$28m\,\bar{x} = 27m\times\frac{3a}{4} - m\left(2a+\frac{a}{4}\right)+m\left(2a+\frac{\lambda}{2}\right)+m\left(2a+\lambda a+\frac{a}{2}\right) \quad (10)$$


$$28\bar{x} = \frac{81}{4}a-\frac{9a}{4}+\left(2+\frac{\lambda}{2}\right)a+\left(\frac{5}{2}+\lambda\right)a$$

$$= \frac{72}{4}a+\frac{9a}{2}+\frac{3\lambda}{2}a$$

$$= \frac{90a}{4}+\frac{3\lambda}{2}a$$

$$\therefore \bar{x} = \frac{3}{56}(15+\lambda)a. \quad (10)$$

60



சமனிலைக்கு, $OG \leq OA.$ (5)

$B\hat{C}D = \frac{3\pi}{4}.$

$\therefore \alpha = \frac{\pi}{4}$

$\therefore AB = a.$

$\therefore OA = 2a - a = a.$ (5)

$\therefore \frac{3}{56}(15+\lambda)a \leq a$

$\therefore 45 + 3\lambda \leq 56$

$\therefore \lambda \leq \frac{11}{3}.$ (5)

15

17. (*a*) ஒரு பெட்டி *C* இல் 2 கறுப்புப் பந்துகளும் 2 வெள்ளைப் பந்துகளும் ஒரு பெட்டி *D* இல் 2 கறுப்புப் பந்துகளும் 1 வெள்ளைப் பந்தும் உள்ளன. இப்பந்துகள் அவற்றின் நிறங்கள் தவிர எல்லா அம்சங்களிலும் சர்வசமமானவை. முதலில் ஒரு பந்து பெட்டி *C* இலிருந்து பெட்டி *D* இற்கு எழுமாற்றாக மாற்றப்படுகின்றது. பின்னர் ஒரு பந்து பெட்டி *D* இலிருந்து பெட்டி *C* இற்கு எழுமாற்றாக மாற்றப்படுகின்றது. இப்போது பெட்டி *D* இலிருந்து ஒரு பந்து எழுமாறாக எடுக்கப்படுகின்றது.

(i) பெட்டி *D* இலிருந்து எடுக்கப்படும் பந்து வெள்ளையாக,

(ii) பெட்டி *D* இலிருந்து எடுக்கப்படும் பந்து வெள்ளை எனத் தரப்படும்போது பெட்டி *C* இலிருந்து பெட்டி *D* இற்கு முதலில் இடமாற்றப்படும் பந்து கறுப்பாக,

இருப்பதற்கான நிகழ்தகவைக் காண்க.


(*b*) பின்வரும் அட்டவணையில் ஒரு வங்கியின் 100 வாடிக்கையாளர்களின் ஆண்டுச் சேமிப்புகளின் தரவுப் பரம்பல் தரப்பட்டுள்ளது.

சேமிப்பு ஆயிரம் ரூபாய்களில்	மீடிறன்
10 – 30	35
30 – 50	40
50 – 70	15
70 – 90	10

மேற்குறித்த தரவுப் பரம்பலின் இடை, இடையம், ஆகாரம், மாறற்றிறன் ஆகியவற்றைக் காண்க.

இப்போது கூடுதலாக x எண்ணிக்கையிலான வாடிக்கையாளர்கள் தரவுப் பரம்பலுடன் சேர்க்கப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் ஒரு தனி வகுப்பு ஆயிடைக்கு உரியவர்களென்க் காணப்பட்டுள்ளது. $(100 + x)$ வாடிக்கையாளர்களின் ஆண்டுச் சேமிப்புகளின் இடை ரூ. 40 000 எனத் தரப்பட்டுள்ளது. புதிய x வாடிக்கையாளர்களின் வகுப்பு ஆயிடை 30 – 50 எனக் காட்டுக.


(*a*) (i)



B-கறுப்பு பந்து

W-வெள்ளைப் பந்து

2 பரிமாற்றங்களின் பின்னர் *D* இல் உள்ள பந்துகளின் பரம்பல்



X : D இலிருந்து எடுக்கப்படும் பந்து வெள்ளையாக இருத்தல்.

$$P(X) = P(X \cap E_1) + P(X \cap E_2) + P(X \cap E_3) + P(X \cap E_4)$$

$$= P(X|E_1).P(E_1) + P(X|E_2).P(E_2) + P(X|E_3).P(E_3) + P(X|E_4).P(E_4)$$

$$= \frac{1}{3} \times \frac{1}{2} \times \frac{3}{4} + 0 + \frac{2}{3} \times \frac{1}{2} \times \frac{1}{2} + \frac{1}{3} \times \frac{1}{2} \times \frac{1}{2}$$

(10) (10) (10)

$$= \frac{1}{8} + \frac{1}{6} + \frac{1}{12}$$

$$= \frac{3}{8} \quad (5)$$

35

(ii)

Y : C இலிருந்து D இற்கு முதலில் இடமாற்றப்படும் பந்து கறுப்பாக இருத்தல்

$$P(Y|X) = \frac{P(X \cap Y)}{P(X)}$$

$$= \frac{P(X|Y).P(Y)}{P(X)}$$

$$P(X|Y) = \frac{1}{3} \times \frac{3}{4}$$

$$P(Y) = \frac{1}{2}$$

$$= \frac{\frac{1}{3} \times \frac{3}{4} \times \frac{1}{2}}{\frac{3}{8}} \quad (10) \quad (5)$$

$$= \frac{1}{3}. \quad (5)$$

20

(b)

5 5 10

வகுப்பாயிடை	f_i	x_i	$f_i x_i$	$f_i x_i^2$	
10 - 30	35	20	700	14000	5
30 - 50	40	40	1600	64000	5
50 - 70	15	60	900	54000	5
70 - 90	10	80	800	64000	5
	100		4000	196000	

அட்டவணைக்கான அதிகபட்ச புள்ளி 20 ஆகும்

$$\text{இடை } \bar{x} = \frac{\sum_{i=1}^{4} f_2 \cdot x_i}{\sum_{i=1}^{4} f_i} = \frac{4000}{100} = 40 \text{ (ஆயிரங்களில்)}$$

10

இடைய வகுப்பு $= 30 - 50.$

$$\text{இடையம்} = 30 + \frac{\left(\frac{100}{2} - 35\right)}{40} \cdot 20 = 37.5 \text{ (ஆயிரங்களில்)}$$

10 5

ஆகார வகுப்பு $= 30 - 50.$

$$\text{ஆகாரம்} = L + \frac{\Delta_1}{(\Delta_1 + \Delta_2)} \cdot c = 30 + \frac{5}{(5+25)} \cdot 20$$ 10

$$= 30 + \frac{10}{3} \approx 33.333 \text{ (ஆயிரங்களில்)}$$

5

$$\text{மாறற்றிறன்} = \frac{\sum f_i x_i^2}{\sum f_i} - \bar{x}^2$$

$$= \frac{196000}{100} - (40)^2$$ 10

$$= 1960 - 1600$$

$$= 360 \text{(ஆயிரங்களின் வர்க்கங்களில்)}$$

5

75

x எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் தரவுப் பரம்பலுடன் இணைக்கப்படுகையில் வகுப்பாயிடையின் நடுப்பெறுமானம் d என்க.

புதிய இடையம் 40 (ஆயிரங்களில்) ஆகையால்,

$$(100+x)40 = d\cdot x + 40\times 100 \quad (10)$$

$$\therefore d = 40. \quad (5)$$

∴ புதிதாய் இணைக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் வகுப்பாயிடை $30-50.$ (5) **20**